பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 16 (1—9—72) வெள்ளி

வெளியூர்: ஆவணி 17 (2—9—72) சனி [இதழ்: 67

இந்தியா வழியாகச் சீன: ஏவுகணைகள்?

புதுடில்லி, ஆக. 31—

கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் ஏவுகணைகளை உற்பத்தி செய்வதில் சீனு வெற்றி கண்டு விட்டது.

இந்தியா வழியாகச் சென்று கிழக்கு ஆப்பிரிக்கத் தீவான ஜான்ஜிபாருக்கு அருகில்--இந்து மாக்கடலில் விழககூடிய வகையில் இந்த ஏவுகணைகள் ஏவப்படும். இது 9,600 கிலோமீட்டர் (அதாவது 6,000 மைல்) தூரமாகும்.

தமிழ்ச் சமுதாயத்திற்குப் புதியதோர் பொற்காலத்தை வழங்கிய பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் --- கழகத் தலைவர் கலைஞர் அறிக்கை

★

கண்ணியத்தை உயிராகக்கொண்டு இயங்கு
இன்ற நமது மூச்சில் -- கட்டுப்பாடு குலையாத
நமது செயலில் அண்ணு இருக்கின்ருர்

'அண்ணனுக்கு ஊரெல்லாம் விழா எடுப்போம்'

கழகத்தின் இலட்சியங்கட்கு வெற்றிதேடப்பாடுபடுவோம்

'வளர்ச்சியின் வடிவத்தை நாடு முழுவதிலும் ஓவியமாகத் தீட்டிக்காட்ட செப்.15-ம் நாள்முதல் விழா தொடங்குவீர்' என வேண்டுகோள்

சென்னை, செப். 1—

"திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாள விழா, செப்டம்பர் 15-ம் நாள்முதல் நடைபெறவிருககிறது; தமிழ்ச் சமுதாயத்திற்குப் புதியதோர் பொற்காலத்தை வழங்கிய அந்தப் பெருமகனுரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் வாயிலாக – அவர் உருவாக்கி வளர்த்த கழகத்தின் இலட்சியங்களுக்கு வெற்றி தேடப் பாடுபட முன்வாரீர்; 'பேரறிஞர் அண்ணு அவர்கள் மறையவில்லை – நம்முடனேயே இருக்கின்ருர்' என்ற உணர்வுடன் நாடு முழுவதிலும் மாபெரும் விழா எடுக்க ஆவன செய்வீர்" என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்; இதன் தொடர்பான அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது :—

"செப்டம்பர் 15-ம் நாள் – நம் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் கலந்து நின்று நம்மை வழிநடத்திச் செல்லும் தூயக்கொள்கைகளுக்குத் தலைவராம் அறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாள்!

தமிழ்ச் சமுதாயத்திற்கும் புதியதோர் பொற்காலத்தை வழங்கிய அந்தப் பெருமகனுரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் வாயிலாக – அவர் உருவாக்கி வளர்த்த கழகத்தின் இலட்சியங்களுக்கு வெற்றி தேடப் பாடுபடுவோம்!

'அண்ணன் இல்லாமல் அவர் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்' என்பது தவறு; அவர் இருக்கிருர்; ஆம் – அண்ணு இருக்கிருர்; கடமை தவருத நமது பேச்சில் – கண்ணியத்தை உயிராககொண்டு இயங்குகின்ற நமது மூச்சில் – கட்டுப்பாடு குலையாத நமது செயலில் அண்ணு இருக்கிருர்; அந்த உணர்வோடு, அண்ணனுக்கு ஊரெல்லாம் விழா எடுப்போம்!

செப்டம்பர் 17-ம் நாள் ஞாயிறன்று சென்னையில் மகத்தான விழா நடத்துகிருர்கள் – மாவட்டக் கழகத்தினர்; செப்டம்பர் 15-ம் நாளன்று எல்லா இடங்களிலும் விழா தொடங்க வேண்டும்.

'விழா, எழிற்கோலம் காட்ட மட்டும் அல்ல – ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் காண – தமிழ்மொழி தழைக்க – தமிழர் நலன்கள் செழிக்க நாம் ஆற்றியுள்ள பணி – ஆற்ற இருககின்ற பணி மற்றியெல்லாம் கணக்கிட்டு, மேலும் தொண்டாற்றச் சூளுரை மேற்கொள்வதற்கும்' என்பதை உணர்ந்து, ஏற்பாடுகளைத் தக்கவாறு செய்திட வேண்டும்.

மாற்ருர் கணைகள் நம்மீது பாய்ந்துகொண்டே இருக்கின்றன; அவைகள் நம்மைத் தாக்கத் தாக்க, மேலும் மேலும் நமது வளர்ச்சி பெருகிக் கொண்டிருக்கிறது!

அதன் வடிவத்தை நாடு முழுவதும் ஓவியமாகத் தீட்டிக் காட்டத்தான் செப்டம்பர் 15-ம் நாள்முதல் விழா தொடங்கிட வேண்டுகிறேன்.

தலைமைக் கழகச் சார்பில் விவர அறிக்கை

தலைமைக் கழகத்தின் சார்பில் விவர அறிக்கையும் -- யார் யார் எங்கெங்கு கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்கிருர்கள் என்பதையும் நமது பொதுச் செயலாளர் அவர்கள் அறிவிப்பார்கள்; அதற்கிடையே கழக அமைப்புக்கள் -- கழகத் தோழர்கள், விழாவைச் சீர்பெற நடத்திட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்."

சொந்த நலனை மட்டும் கருதாதீர்

தொழிலாளர்கட்கு இந்திரா எச்சரிக்கை

புதுடில்லி, செப். 1

"தொழிலாளர்களும் – தொழிலதிபர்களும் தங்கள் சொந்த நலன்களைப் பற்றி மட்டுமே கருதுவார்களானல், உற்பத்திக் குறைவினின்றும் உருவாகும் பணவீக்க நிர்ப்பந்தங்களின் காரணமாகத் தொழிற் சங்கங்களின் செயல் முறைகள் மூலம் பெறக்கூடிய இலாபங்கள் எதனையும் இழக்க நேரிடும்"

—என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அசாம் வாரப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிருர்; அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"வாழ்க்கையில் எதனையும் மொத்தமாக எடுத்துக்கொள்ள முடியாது; அன்ருடத் தேவைகள் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும்; இதில் அரசு எதை விரும்புகிறது என்பது மட்டும் பிரச்சினையல்ல; மக்களுக்கு என்ன தேவை என்பதுதான் முக்கியம்.

"ஏகபோகத்தைத் தடுப்பதில் வெற்றி காணத் தொடங்கியிருக்கிறோம் என்று நினைக்கிறேன்."

50,000 டன் நெல் கொள்முதல்

தமிழக அரசு திட்டம்

தஞ்சை, ஆக. 31—

தஞ்சை மாவட்டத்தில் வரும் குறுவை அறுவடையின் போது 50,000 டன் நெல்லை 'அரசாங்க ஆதரவு விலையில்' கொள்முதல் செய்வதற்குத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது.

இத்தகவலை, சிவில்வழங்குதுறை கமிஷனர் இராமச்சந்தர் இங்கு தெரிவித்தார்.

அரசின் நெல்கையிருப்பை அதிகமாக்குவதற்காக இந்தக் கொள்முதல் நடத்தப்படவில்லை; விவசாயிகளுக்கு உதவவேண்டும் எனனும் நோக்கத்திலேயே இந்தக் கொள்முதல் நடக்கிறது" என்று அவர் கூறினர்.

"சென்ற ஆண்டு நடைபெற்ற கொள்முதலின் மாதிரியிலேயே இந்த ஆண்டும் நெல் கொள்முதல் செய்யும்; இவற்றை நவீன அரிசி ஆலைகளில் அரைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்; தஞ்சை மாவட்டத்தில் 32 நெல் கொள்முதல் நிலையங்களை அமைப்பதற்கு இந்திய உணவுக் கார்ப்பரேஷன் இணங்கியிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் நெல் கையிருப்பு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது; தற்போது 1,10,000 டன் நெல் கையிருப்பு உள்ளது; இதை தவிர, இந்திய உணவுக் கார்ப்பரேஷனிடம் 25,000 டன் நெல் கையிருப்பு இருக்கிறது" என்றும் அவர் சொன்னர்.

உடன்பாட்டைச் செயலளவில் மதிக்கவில்லை

கலக நாகர்களின் அமைப்புகள் சட்ட விரோதமானவை

கோகிமா, ஆக. 31—

'நாகா தேசியக் கவுன்சில்'— 'நாகா கூட்டாட்சி அரசு'— 'நாகா கூட்டாட்சி இராணுவம்' ஆகிய இரகசிய நிறுவனங்கள்-- சட்டவிரோத நடவடிக்கை (தடுப்பு) சட்டத்தின் கீழ், சட்ட விரோத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

நாகாலாந்து கவர்னர் பி.கே. நேரு, இதை வானெலி மூலம் அறிவித்தார்.

'நடவடிக்கை நிறுத்த' உடன்பாட்டை மாதந்தோறும் நீடித்து வந்த நடைமுறை கைவிடப்படுவதாகவும், நாகா இரகசிய அமைப்புகள் இதைச் செயலளவில் மதித்து நடக்காததே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறினர்.

கழகத்தின் பயணம் கடுமையானது -- காட்டாறுகள் பலவற்றைக் கடக்க வேண்டியிருக்கிறது

[★]

உரிமைக்கு வாதாடும் கட்டம் வருகின்றபோது உள்ள உறுதியுடன் செயல்பட முனைவீர்

[★]

அண்ணா வழி அன்பு வழி -- அரசியல் பண்பாட்டு வழி -- அவ்வழி செல்லும் நாம் எதிரியின் இழிவுரைகளைத் தாங்கிக்கொள்வோம்

கழகத் தோழர்களுக்குக் கலைஞர் கனிவுரை

திருவாரூர், ஆக. 31 —

'திராவிட முன்னேற்றக் கழகத்தின் சக்தியைத் தோழமைக் கட்சியினராக இருந்தவர்களில் சிலர் அலட்சியப்படுத்திவிட்டுப் பேசுகிறார்கள்; 'தி. மு. கழகத்தைப் பற்றி எது வேண்டுமானாலும் பேசலாம் -- அதனுடைய தலைவர்கள், கட்சிக்காரர்களையெல்லாம் அமைதிப்படுத்தி வைத்திருக்கிறார்கள் -- ஆகவே, நாம் எதையும் பேசலாம்' என்ற துணிவுடன் இருக்கிறார்கள்! எதிரிகளையும் மதித்துப் பழக்கப்பட்டது தி. மு. கழகம்; அந்தக் கழகத்தைக் கட்டிக்காக்கின்ற நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்வேன் -- என்றென்றும் யார் என்ன பேசினாலும் -- பகை வெளியிலே இருந்து வந்தாலும் -- உள்ளே முளைத்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் 'நம்முடைய பயணம் கடுமையானது -- காட்டாறுகளைக் கடக்கவேண்டியிருக்கிறது என்று எண்ணிச் செயல்படுங்கள்' என்று!

"இன்றைக்கு ஏதோ நாம் ஆட்சிபீடத்திலே அமர்ந்திருக்கிறோம்; நாளைக்கு இந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக வாதாட வேண்டிய சட்டம் வருகின்ற நேரத்தில், 'இவையெல்லாம் தேவையில்லை' என்று ஒதுக்கிவிட்டு, அந்த வீரப் பயணத்தை நடத்திட அழைக்கப்பட்டால் -- 'அழைக்கப்படுவோம்' என்கின்ற உள்ள உறுதியோடு அனைவரும் பணியாற்ற வேண்டும்; அதுதான் கழகத்திற்கு நீங்கள் செய்கின்ற நன்றிக்கடனாகும்."

— என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், திருவாரூரில் கடந்த 28-ம் நாளன்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கட்டிக் காட்டி வலியுறுத்தினார்; மேலும் அவர், தி. மு. கழகம் உருவான கட்டங்களைச் சுட்டிக்காட்டினார்; அண்ணாவின் அரவணைப்பாலும் -- உழைப்பாலும் ஒளி உயர்ந்ததைக் குறிப்பிட்டு விளக்கினார்; கழகத்தைக் கட்டிக்காத்த தங்கள் குருதியைச் சிந்தியவர்களை நினைவு கூர்ந்தார்; மாற்றாரின் எதைத் தச்சமேனை மதித்து மக்களின் நல்வாழ்வுக்கான பணியில் ஈடுபட்டதையெல்லாம் மக்கள் முன் வைத்து நல்ல தீர்ப்பு கோரினார்; இறுதியில் அவர் மாற்றாரின் பொல்லாதப் பேச்சுக்கள் பற்றிக் கழகத் தோழர்கள் கவலையுறாமல் பேரறிஞர் அண்ணா அவர்களின் காட்டிய பாதையைப் பின்பற்றி கழகத்தைக் கட்டிக்காக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டுப் பேசுகையில் கூறியதாவது :—

"திராவிட முன்னேற்றக் கழகம் அன்பால் — பண்பால் — அடக்க உணர்ச்சியால் — அறிஞர் அண்ணா அவர்களின் அரவணைப்பால் — உழைப்பால் வளர்ந்து, வலிவு பெற்று ஓங்கி உயர்ந்திருப்பதைப்பற்றி யார் யாரோ என்னென்னவோ பேசுவதாக வருத்தப்பட்டார்கள்; நம்முடைய குடும்பங்களைப் பற்றியெல்லாம் பேசுவதாகச் சொன்னார்கள்.

அப்படிக் குடும்பங்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் நம்மை அவர்கள் ஏசுகிறார்கள் -- பேசுகிறார்கள்; அவர்களுக்கு அந்தத் தொல்லை (குடும்பங்கள் என்கின்ற தொல்லை) இல்லாத காரணத்தால்தான் அவர்களால் இப்படி எளிதாகப் பேச முடிகிறது; அப்படி எண்ணித்தான் அவர்களின் அந்தப் பேச்சை விட்டுவிட வேண்டும்; அவர்கள் அப்படிப் பேசுகிறார்கள் என்பதற்காக நம்மிலும் சிலர், அவர்கள் தரத்துக்கு இறங்குவது முறையல்ல -- பண்பல்ல!

திருவாரூரிலே பல கட்சிகளின் அமைப்புகளிலே செயல்பட்டுவந்த 22 பேர் இன்றைக்குக் கழகத்திலே வந்து உறுப்பினர்களாக சேர்ந்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம், 'இது தரமான மேடை' என்பதால்தான்!

தரமற்ற பேச்சுக்களை அவர்கள் தங்களுடைய மேடைகளிலே கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய், 'ஐந்தாண்டுக் காலமாய் ஆளும் கழகம் அண்ணா வழியே உழைத்து உழைத்து -உண்மையான சோஷலிசத்தை உச்சரிப்பு அளவிலே நிறுத்தாமல் உள்ளத்தில் பதியவைத்து -- அதைச் செயல் மலராக மலரச் செய்து பணியாற்றி வருகின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பாராட்ட மனமில்லாது போனாலும், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதை இதையெல்லாம் செய்வோம்' என்று கொள்கைகளை விளக்குவதற்கு வக்கு இல்லாமல் முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களை -- முன்னேற்றக் கழக அமைச்சர்களை -- முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, வட்ட, நகரச் செயலாளர்களையே திரும்பத்திரும்பத் தரக்குறைவாகப் பேசுகின்ற ஒரு பழக்கத்தையே வைத்துக்கொண்டிருக்கிறார்களே என்கின்ற கவலையின் காரணமாகத்தான் அவர்கள், 'உண்மையாகச் செயல்படுகின்ற இடத்திற்குச் செல்லுவோம் - உண்மையே பேசுகின்ற இடத்திற்குப் போவோம் -- நாகரிகம் தவழுகின்ற இடத்திற்குச் செல்லுவோம் -- எங்கு அரசியல் பண்பாடு இருக்கிறதோ அங்கே செல்லுவோம் -- எங்கு அண்ணாவின் வழியும், அன்பு வழியும், அரசியல் பண்பாட்டு வழியும் இருக்கிறதோ அந்த இடத்திற்குச் செல்லுவோம்' என்றுதான் இங்கே வந்திருக்கிறார்கள்!

வந்தவர்களை விரட்டுவதுபோல், 'இந்த மேடையிலும் எங்களுக்கும் அப்படிப் பேச முடியும்' என்று பேசுவோமேயானால், உள்ளபடியே நான் அப்படிப் பேசியவர்கள் சார்பில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்!

நாம் இன்று பெற்றிருக்கின்ற பாடம் -- கற்றிருக்கின்ற வழி -- நாட்டிலே நாம் பரப்ப வேண்டுமென்று கருதியிருக்கின்ற வழி -- அப்படிப்பட்டதல்ல; அவர்கள் அப்படிப் பேசிப் பேசித்தான் அந்த இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்!

நாம் அவர்களுடைய பேச்சைக் காதிலே போட்டுக்கொள்ளாமல், எவ்வளவு ஏசினாலும் -- எவ்வளவு தூற்றினாலும் -- எவ்வளவு இழிவுரைகளை வாரி இறைத்தாலும் -- ஏளனமானாலும் -- எரிச்சல் கணைகள் ஆனாலும் அவைகளையெல்லாம் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டுத்தான் இன்றைக்கு நாம் இந்த இடத்திலே வந்து அமர்ந்திருக்கிறோம்.

வீரத்தின் இலக்கணம் காலத்துக்குக் காலம் மாறுபடும் ஒன்றாகும்

அந்தக் காலத்திலே இந்த இயக்கத்தை வீரத்தைக் காட்டித்தான் வளர்க்க வேண்டியிருந்தது; வீரத்தின் இலக்கணம் காலத்திற்குக் காலம் மாறுபடுகிறது -- அதை மறந்துவிடக்கூடாது!

இரண்டு பேர் வாளெடுத்துச் சண்டை போட்டு அதிலே ஒருவனுடைய வாள் முறிந்து தோற்றால், 'அவன் தோல்வி கண்டான் -- இவன் வெற்றி பெற்றான்' என்பது, வீரத்தின் இலக்கணம் - ஒரு காலத்தில்; ஆனால் இன்றைக்கு இரண்டு பேர் வாளெடுத்துச் சண்டை போடுவதல்ல வீரத்தின் இலக்கணம்; சனநாயகத்தில் அதுவல்ல இலக்கணம்; இங்கு நின்று கொண்டிருக்கின்ற ஒரு பெண் எதிர்பாராதவிதமாக அருகிலுள்ள கமலாலயக் குளத்தில் விழுந்து விட்டால், உடனே ஓடிச் சென்று குளத்தில் குதித்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றிக் கொண்டு வருவதுதான் இன்று வீரத்தின் இலக்கணமாக இருக்கிறது; ஆகவே, வீரத்தின் இலக்கணம் காலத்துக்குக் காலம் மாறுபடுகின்ற ஒன்றாகும்; அப்படி மாறுபட்டிருக்கின்ற சனநாயகக் காலத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனாலும் உங்களுக்குப் பதட்டம் ஏற்படுகிறது; 'நமக்குக் கை கால்கள் இருக்கின்றன; நம்முடைய வீரம் சோரம் போய்விடவில்லை; நம்முடைய நெஞ்சத்தின் துணிவு அழிந்து விடவில்லை; இருந்தாலும், நம்முடைய தலைவர்களை இப்படித் தாக்கிப் பேசுகிறார்களே' என்று எண்ணுகின்ற நேரத்தில் உங்களுக்கு மனம் புண்படத்தான் செய்யும் — தாங்கிக்கொள்ள இயலாத நிலைதான் இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட ஏச்சுக்களைத் தாங்கித்தான் வளர்ந்தது என்பதை அருமை நண்பர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு அகிலம் அதனைச் சொல்கிறது.

மக்கள் மன்றத்திலே விளக்கும் வித்தகர்கள் நம்மிடம் உள்ளனர்!

இங்கே இருக்கின்ற சில பத்திரிகைகளில் நம்முடைய செய்திகள் வராவிட்டாலும், நம்முடைய செய்திகளை இரண்டு பக்கம் -- மூன்று பக்கம் என்று வெளியிட்டு விமர்சித்து, 'இந்தியாவிலேயே சனநாயகத்தினுடைய கண்ணாக தமிழ்நாடு இருக்கிறது -- தி. மு. க. அரசு இருக்கிறது' என்று சுட்டிக்காட்டி எழுதுகின்ற ஏடுகள் இன்றைக்கும் பம்பாயில் -- கல்கத்தாவில் -- டெல்லியில் இருக்கின்றன!

'கேரவன்' என்கின்ற ஆங்கில ஏடு ஒன்றில், திராவிட முன்னேற்றக் கழக அரசினைப் பற்றியும் -- இந்த அரசு ஐந்தாண்டுகளில் செய்துள்ள சாதனைகளைப் பற்றியும் -- இந்த அரசை வீழ்த்த நினைப்போர் யார் யார் என்பதைப் பற்றியும் வெகு விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது!

இங்கிருப்பவர்கள் நம்மைப் பற்றிக் கவலைப்படாவிட்டாலும் -- அல்லது கவலை காரணமாகப் புறக்கணித்து விட்டாலும், 'புறக்கணித்தால்தான் இவர்கள் வளரமாட்டார்கள்' என்று நம்புகின்ற காரணத்தால், நம்முடைய செய்திகளைக் குறைத்து -- இருட்டடிப்புச் செய்து மக்கள் மன்றத்தில் தெரியவிடாமல் செய்தாலும், மக்கள் மன்றத்தில் பறைசாற்ற அந்த ஏடுகளைவிட அதிகமான சொற்பொழிவாளர்கள் நம்மிடம் ஏராளமாக இருக்கிறார்கள்; அவர்கள் அத்தனை பேரும், 'ஆளுக்குப் பத்து நிமிடம் -- பத்து நிமிடம் பேசக்கூடிய சரக்கு உள்ளவர்கள்' என்று மட்டும் யாரும் கருதிவிடாதீர்கள்; தனித்தனியாக ஒவ்வொரு ஊரிலே கூட்டம் போட்டால், மணிக்கணக்கிலே கழகத்தைப் பற்றி -- நாட்டைப் பற்றி -- பிற கட்சிகளைப்பற்றி விளக்கம் உரைக்கக்கூடிய வீரர்கள் -- வித்தகர்கள் அவர்கள்!

ஒரு நாள் குறிப்பிட்டு, 'தமிழகம் முழுவதும் அண்ணா பிறந்த நாளைக் கொண்டாடுங்கள் -- தமிழகம் முழுவதும் ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொருவர் கலந்து கொள்ளுங்கள்' என்று அறிக்கைவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரல் ஒலிக்காத பட்டிதொட்டி -- பட்டினக்கரை மைதானம் -- கடற்கரைப் பெருவெளி — 'இனி இடங்களே எதுவும் தமிழகத்திலே இல்லை' என்று விபாபிக்கின்ற விசுவரூபத்தை திராவிட முன்னேற்றக் கழகம் பெறும்!

எந்தக் காலத்திலும் தலைமையைப் பெற்றிருப்பது தி. மு. கழகம்

ஆலமரத்திற்குப் பிறகு விழுது இருந்தால்தான், அது ஆலமரத்துக்குப் பெருமை; இல்லையேல், அது ஆலமரமல்ல! அதைப்போலத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் எந்தத் தலைமை மறைந்தாலும் -- எந்தத் தலைமையும் காலத்தின் கரங்களுக்கு ஆட்பட்டாலும் -- எந்தத் தலைமையும் கல்லறைக்குச் செல்லவேண்டிய நிலைமை தவிர்க்க முடியாமல் ஆகிவிட்டாலும் -- அதற்குப் பிறகும் தலைமையைப் பெற்றிருக்கக்கூடிய கழகம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கழகத்தைக் கட்ட -- இந்தக் கழகத்தை மாளிகையாக ஆக்க -- இந்தக் கழகத்தைக் கோட்டையாக உருவாக்க நாம் அத்தனை பேரும் பாடுபட்டிருக்கிறோம்; அத்தனைப்பேரும் உழைத்திருக்கிறோம்; அத்தனைப்பேரும் குருதி கொட்டியிருக்கிறோம்; அத்தனை பேரும் எலும்புகளை ஒடித்துக் கொடுத்திருக்கிறோம்; அத்தனை பேரும் நரம்புகளைக் கயிறுகளாக ஆக்கியிருக்கிறோம்; அப்படிக் கட்டப்பட்ட மாளிகைதான் திராவிட முன்னேற்றக் கழகமாகும்."

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

31-8-1972 அன்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற 47-வது குலுக்கல் முடிவுகள் — பரிசுகள் பெற்ற எண்களின் விவரம் :—

'ஜே. எம்.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000
928761

5 இரண்டாவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்

025224 128908 196977 680928
981686

10 மூன்றாவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

101360 150052 248128 519019
562742 621620 710310 882481
900622 997488

50 நான்காவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

003422 034017 059988 060481
082893 111819 124542 140282
150874 169059 186068 210147
249220 268588 269181 326264
347017 353037 435161 448852
454053 482439 520053 528881
550516 559214 582804 598066
603899 613432 619484 621661
640301 697384 701899 744031
764640 797770 811938 854668
880010 892372 920208 921184
921440 958011 958232 962126
967291 996451

1,000 ஐந்தாவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—

1792 1833 1844 2154 2600
5920 6046 6996 8333 9238

'ஜே. என்.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000
838303

5 இரண்டாவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்

089887 570769 841836 911718
951299

10 மூன்றாவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

162215 411120 439010 648606
746405 823549 854811 861790
872061 936984

50 நான்காவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

027305 051338 111399 219395
223902 261720 271496 303860
307619 322037 326871 349670
356546 363082 368785 385707
402010 434970 456854 460408
460962 471994 505697 518083
526162 551835 579104 602817
632218 664794 680928 682734
701051 725372 755154 769099
790402 792461 861384 925021
925223 944384 946822 953886
964333 966845 975095 976851
982579 988978

1,000 ஐந்தாவது பரிசுகள் — ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—

0238 0279 0925 1172 2111
3022 5473 5549 7058 9085

முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், 3-வது பரிசுமுதல் 5-வது பரிசுவரை பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்தும் பரிசுகளைப் பெறலாம்.

எழுதித் தரவேண்டிய படிவங்கள் பரிசுகள் பெறவேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையில் உள்ள வங்கிகள் மூலமாகவோ கொடுக்கலாம்.

பரிசு பெற்ற எண்கள் அடங்கிய விவரப் பட்டியல் தமிழக அரசிதழ்களிலும் அச்சிடப்படுகின்றன; மேற்படி பட்டியல் வேண்டுவோர், 'உதவிப் பணி மேலாளர், அரசு வெளியீட்டு நிலையம், 166, அண்ணா சாலை, சென்னை-2' என்ற முகவரிக்கு எழுதி அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுச் சீட்டு பற்றி விவரங்கள் எதுவும் தேவைப்பட்டால், 'இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2' என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளக் கடைசித் தேதி : 27—9—1972

48 வது குலுக்கல்

48 வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் 1972 செப்டம்பர் மாதம் 30 ந் தேதி நடைபெறும்.

மொத்தப் பரிசுகள் : 2,132
மொத்தப் பரிசுத் தொகை : ரூ. 7,00,000

அடுத்த குலுக்கல் : 30-9-1972 -- அடுத்த குலுக்கலுக்கு வரிசைகள் : 2 (இரண்டு) -- 'ஜே. ஓ.' -- 'ஜே. பி.'

இதுவரை 293 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது! பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய், விற்பனை அடிப்படையில் மாவட்டங்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது. கல்விக்கூடங்கள் கட்ட — நோய் தீர்க்கும் மருந்தகங்கள் அமைக்க இப்பணம் செலவிடப்படுகின்றது. நாடு நலம் பெற — உங்கள் நல்வாய்ப்பினைச் சோதிக்க — வாங்கிடுவீர் தமிழகப் பரிசுச் சீட்டு!



ஒரு சீட்டின் விலை ரூ. 1-தான்

தே. அரங்கநாதன், இயக்குநர்,
தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

காமராசரின் கருத்தற்ற -- கண்ணியமற்ற கூற்று:

கழகத் தலைவர் கலைஞர் உண்மை நிலை விளக்கம்

வறுமைக் காடாகத் தமிழகத்தை உருவாக்கியிருந்தனர்

அவலம் நிறைந்த நிலையிலே ஆட்சியைத் தி. மு. கழகத்திடம் ஒப்படைத்துவிட்டுத் தப்பித்துக் கொண்டனர்

திருவாரூர், ஆக. 31—

"சென்னையிலே காமராசர், 'படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அவர்களெல்லாம் புரட்சி செய்வார்கள்' என்று பேசியிருக்கிறார்; நான் படித்தவர்களைக் கேட்கிறேன் -- பொருள் புரிந்த அரசியல்வாதிகளைக் கேட்கிறேன் -- வேலையில்லாத் திண்டாட்டம் 1967-க்குப் பிறகுதான் ஏற்பட்டதா' என்று!

இன்றைக்கு இந்தியாவில் பல இலட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்; தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 11 இலட்சம் பேர் -- 4 கோடி மக்களில் படித்துப் பட்டம் பெற்ற 11 இலட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் -- நம்முடைய மாநிலத் திட்டக்குழு எடுத்திருக்கின்ற புள்ளிவிவரம் அது!

காமராசரைக் கேட்கிறேன் -- உங்களுடைய இருபதாண்டுக் காலக் காங்கிரசு ஆட்சியில்தானே வேலை தேடித் தரும் நிறுவனத்தை (எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச்) அமைத்தீர்கள்? ஏன் அந்த நிறுவனம் தேவைப்பட்டது? வேலை வாய்ப்பு அமோகமாக இருந்தால் -- 'வேலைக்கு வா, வா' என்று அழைக்கின்ற தன்மை இருந்தால் -- வேலை தேடித்தரும் நிறுவனம் அன்றைக்குத் தேவைப்பட்டிருக்குமா?

பண்டித ஜவகர்லால் நேருவின் ஆட்சிக் காலத்தின்போது, ஜெர்மானிய நாட்டவர், 'உலகப் போரினால் ஜெர்மனியில் வேலை செய்ய ஆட்கள் இல்லாமல் போய்விட்டார்கள்; அந்த அளவுக்கு ஜெர்மனி சீர்குலைந்து கிடக்கிறது; இங்கே இயந்திரங்கள் ஓட -- தொழிற்சாலைகள் இயங்க -- இந்தியாவிலிருந்து ஆட்களை அனுப்பி வையுங்கள்' என்று கேட்டுக்கொண்டனர்; உடனே நேரு, 'இன்னொரு நாட்டுக்கு என்னுடைய நாட்டு மக்களை அனுப்பிவைக்க மாட்டேன்' என்று வீரத்தோடு சொல்லிவிட்டார் -- தாயகத்தின் தன்மானத்தைக் காக்கும் வீரராக அந்த நேரத்தில் செயல்பட்டார்!

அந்தக் காலத்திலேயே இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருந்த காரணத்தால்தான், ஜெர்மானிய நாட்டவர், 'எங்கள் நாட்டிற்கு ஆட்களை அனுப்புகிறீர்களா -- இங்கு வேலையிருக்கிறது' என்று சொன்னார்கள்.

ஆனால் காமராசரோ, 'தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது' என்று சொல்வதில் ஏதேனும் அர்த்தமிருக்கிறதா?

அவர்களுடைய இருபது ஆண்டுக் கால ஆட்சியில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட்டா தி.மு. கழகத்திடம் ஆட்சியை ஒப்படைத்தார்கள் -- இல்லையே!

'தமிழ்நாடு முழுவதும் இணைப்புச் சாலைகளைப் போட்டோம்; இந்தாருங்கள் ஆட்சி' என்று ஒப்படைத்தார்கள் -- இல்லையே.

'தமிழ்நாடு முழுவதும் மின்சார விளக்குகளைப் போட்டுவிட்டோம்; இருளே எங்கும் இல்லை; எல்லாக் கிராமங்களும் ஒளிமயமாக இருக்கின்றன' என்று கூறியா ஆட்சியை ஒப்படைத்தார்கள் -- இல்லையே!

'பிச்சைக்காரர்களே தமிழ்நாட்டில் இல்லை' என்று கூறியா ஆட்சியை ஒப்படைத்தார்கள் -- இல்லையே!

'வீடில்லாத ஏழையே கிடையாது. அனைவருக்கும் வீடு என்கின்ற நிலையை இருபதாண்டுக் கால ஆட்சியில் ஏற்படுத்தியிருக்கிறோம்; இந்தாருங்கள் ஆட்சி' என்று சொல்லியா ஒப்படைத்தார்கள் -- இல்லையே!

எந்த நிலையிலே ஆட்சியை அவர்கள் நம்மிடம் ஒப்படைத்தார்கள் தெரியுமா? அவலம் -- அமைதி -- அமளி -- அறியாமைத் தன்மை -- 'ஐயோ' என்ற கூச்சல் -- வேலை கிடையாதே என்கின்ற வேதனை -- வாட்டம், வறுமை -- குடிசைகளிலே புயல் -- தழுவுகின்ற உள்ளங்கள் -- என்ற நிலையிலே இருந்த நான்கு கோடி மக்களைத்தான் தி. மு. கழகத்திடம் ஒப்படைத்துவிட்டு இனிமேல் இருந்தால் நம்மால் சமாளிக்க முடியாது, இப்போதே மக்கள் ஓட்டுப் போட மறுத்தார்கள்; பிறகு என்ன செய்வார்களோ தெரியாது; நல்ல வேளை -- இவர்கள் வந்து மாட்டிக்கொண்டார்கள்' என்ற எண்ணத்துடன் எங்கள் கையிலே ஆட்சியை ஒப்படைத்துவிட்டுத் தப்பித்துக் கொண்டார்கள்!

நிர்வாகம் சீர்குலைந்துவிட்ட ஒரு நிறுவனத்தை -- யாரோ ஓர் ஏமாளி ஏற்றுக்கொண்டதைப் போல், நாங்கள் அந்த நேரத்தில் ஏற்றுக் கொண்டோம்!

திவாலாகிவிட்ட ஒரு பாங்கியை -- யாரோ இன்னொரு பாங்கிக்காரன் ஏற்றுக்கொண்டதைப் போல் நாங்கள் ஏற்றுக்கொண்டோம்!

வறுமைக் காடாக ஆக்கப்பட்டிருந்த தமிழகத்தின் ஆளும் பொறுப்பை நாங்கள் அந்த நேரத்தில் ஏற்றுக் கொண்டோம்!"

—திருவாரூர் பொதுக்கூட்டத்தில்

நகராட்சி ஊழியர்கட்குப் பென்ஷன்

தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஆக. 30-

1970 சனவரி 14-ந் தேதிக்கு முன்பு ஓய்வுபெற்ற நகராட்சி ஊழியர்களுக்கும் பென்ஷன் வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ்நாடு அரசு ஆராய்ந்து — அவர்களுக்கு மாதம் ரூ. 25 அல்லது ஊழியர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் கால் பங்கை பென்ஷனை அளிக்க உத்தரவிட்டிருக்கிறது.

நகராட்சிகள் இதற்கான விதிகளை வகுத்து தங்கள் நிதியிலிருந்து இந்தப் பென்ஷனை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி ஆசிரியர்களுக்குத் தனி பென்ஷன் திட்டம் இருப்பதால், அவர்களுக்கு இந்தப் பென்ஷன் திட்டம் பொருந்தாது.

கடலுக்கு அடியில் இரயில் பாதை

ரூ. 380 கோடி செலவாகும்

இலண்டன், ஆக. 31—

கடலுக்கு அடியில் இரயில் பாதை அமைத்து, இலண்டன் — பாரிஸ் நகரங்களை இணைக்கும் திட்டத்திற்கான இறுதி ஆய்வுப் பணிகளை நடத்த இரு அரசாங்கங்களும் அனுமதி அளித்துவிட்டன.

இலண்டனுக்கும் — பாரிசுக்கும் இடையில் போடப்படும் இரயில் பாதையின் மொத்த நீளம் 39 மைல்; இதில் 33 மைல் நீளத்திற்கான பாதை 'குழாய்ப் பாதை'யாக அமையும்; இதில் 23 மைல் கடலுக்கு அடியில் போடப்படும்; இந்தக் குழாய்ப் பாதையில் இருவழி இரயில் பாதைகள் போகவும் -- வரவும் போடப்படும்.

இது மத்திய ஆய்வுப் பணியில் ஈடுபடவிருக்கும் சர்வதேசக் குழு தனது அறிக்கையை அடுத்த ஆண்டு மத்தியில் அளிக்கும்; சாதகமான அறிக்கை கிடைத்தால் பின்னர் வேலை மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்திற்கு 200 மிலியன் பவுன்கள் (சுமார் ரூ 380 கோடி) செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பம்பாய் மக்கள் நலக் கல்விக் கழகம்

குழுக் கூட்ட முடிவுகள்

பம்பாய் மக்கள் நலக் கல்விக் கழகச் செயற்குழுக் கூட்டம், 9—8—72-ல் 'திராவிடரகத்'தில், தோழர் எஸ் தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. கடந்த கூட்ட அறிக்கை படித்துக்காட்டப்பட்டு திருத்தமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்களாகச் செயலாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்கள் து. பாண்டியன், சண்முகம், எஸ். இளங்கோ, கே. எம். சிவராசு ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

நவம்பர் 15-ம் நாள் சண்முகானந்தா கலை அரங்கில் நடைபெற விருக்கும் சிறப்பு நிகழ்ச்சியில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர் அவர்கள் தலைமை தாங்கும் சிறப்பு நிகழ்ச்சிக்கு ரூ. 100—ரூ. 50—ரூ. 25—ரூ. 10—ரூ. 5 நுழைவுக் கட்டணமாக வைப்பதெனவும், நிகழ்ச்சியின்போது சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவதெனவும், மலர் வெளியீட்டுக் குழுத் தலைவராகக் கல்வி கழகத் தலைவர் எஸ். அமர்நாத் அவர்கள் தலைவராகவும், செயலாளர்களாகத் தோழர்கள் கே. கல்யாணசுந்தரம், த. மு பொற்கோ ஆகியோர் நியமனமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சண்முகானந்தா கலை அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிக்கான நுழைவுக் கட்டணம் ரூ. 100-க்கு மூவரையும், ரூ. 50-க்கு இருவரையும், ரூ. 25—ரூ 10—ரூ. 5-க்கு ஒருவரையும் அனுமதிப்பதெனவும்; தற்போதைய 28 செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை 30-க்குமேல் உயர்த்த வேண்டாமெனவும்; கலை நிகழ்ச்சியின்போது வெளியிடப்படும் மலரை ரூ. 1-க்கு விற்பது எனவும், மலர் பெறுபவர்களுக்கு ஐந்து பரிசுகள் நிகழ்ச்சி மேடையிலேயே வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

புதிய செயற்குழு உறுப்பினராக வான்மதியை ஆர். ஏ. சுப்பையா முன்மொழிந்ததை குழு ஏற்றுக் கொண்டது.

நிதிக் குழு உறுப்பினர்களும், செயற்குழு உறுப்பினர்களும் நிதி வசூலில் தவறாமல் கலந்து நிதி வசூலை சிறப்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் ஆரியசங்காரன் நன்றி நவின்றார்.

பின்னர், கல்விக் கழகப் பொருளாளர்கள் தோழர்கள கே. ஏ. வடிவேல், எஸ் வள்ளிநாயகம் ஆகியவர்களின் மகன் -- தாயார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மறைமலையடிகள் நூல் நிலையம்

14-ஆம் ஆண்டு நிறைவு

சென்னை, ஆக. 31—

மறைந்த தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளார் பெயரால் சென்னை -- இலிங்கிச் செட்டித் தெருவில் நடைபெற்று வரும் மறைமலையடிகள் நூல் நிலையம் தொடங்கப் பெற்று ஆக. 24-ம் நாளுடன் பதினான்கு ஆண்டுகள் நிறைவுற்றன.

மறைமலையடிகள் தம் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்து வைத்த நான்காயிரம் நூல்களுடன் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் சேர்த்து வைத்திருந்த ஐயாயிரம் நூல்களையும் சேர்த்து இந்நூல் நிலையத்தைக் கழகம் சிறப்பாக நடத்தி வருகின்றது.

கடந்த பதினான்கு ஆண்டுகளில் புதிதாக 15,522 நூல்கள் சேர்க்கப் பெற்றன; இவற்றைச் சேர்த்த இன்று நூலகத்தில் சுமார் 20,060 நூல்கள் உள்ளன.

பல்கலைக் கழக -- கல்லூரிப் பேராசிரியர்களும், ஆசிரியப் பெருமக்களும், ஆராய்ச்சியாளர்களும் இதனை நன்கு பயன்படுத்துகின்றனர்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இந்நூலகத்தை பயன்படுத்த அறிஞர்கள் வருகின்றனர்; மேனாட்டினரும் அவ்வப்போது நூலகத்திலுள்ள அரிய நூல்களை ஆராய வருவர்.

1971–72 ஆண்டில் இந்நூலகத்தைப் பயன்படுத்தியவர்கள் 22,497 பேர்; படித்த நூல்கள் -- 10,739; தமிழ் -- 7,414; ஆங்கிலம் -- 3,325

இவ்வாண்டில் புதிதாக சேர்க்கப்பெற்ற நூல்கள் -- 2,351.

நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிப்பதற்காக வழங்கும் பகுதி தனியாக இயங்கி வருகின்றது: இதில் 3 891 நூல்கள் உள்ளன; சுமார் 400 உறுப்பினர்கள் இப்பகுதியைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாண்டு நூலகத்தில் இரண்டாம் மாடியில் 300 பேர் அமர்ந்து சொற்பொழிவு கேட்பதற்கு ஏற்ற வகையில் வள்ளலார் திருவருள் மண்டபம் புதிதாக அமைக்கப் பெற்றது; 29—3—72-ல் திரு. ந. மகாலிங்கம் தலைமையில் கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் இந்த மண்டபம் திறந்து வைக்கப்பெற்றது.

நூல் வெளியீடுகளும், பரிசுச் சொற்பொழிவுகளும் இம் மண்டபத்தில் நடைபெறுகின்றன.

இந் நூலகம் நாள்தோறும் காலை 8 முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்; பொதுமக்கள் அனைவரும் இந் நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

போலிக் குத்தகைகளின்கீழ் கோவில் நிலங்கள்

அதிகாரமற்றவர்களிடம் 12,784 ஏக்கர்கள்

தணிக்கைகள் மூலம் தெரியவரும் தகவல்கள்

சென்னை, ஆக 31—

தமிழ்நாட்டில் மத -- கோவில் அறக்கட்டளைகளின் கீழுள்ள சுமார் 12,784 ஏக்கர் நிலங்கள், அதிகாரம் பெறுத வர்களிடம் இருப்பதாக அரசுக்கு இந்து மத -- அறக்கட்டளைகள் பாதுகாப்புத் துறை அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்நிலங்கள், 35 பட்டியல் பதிவு பெற்ற நிறுவனங்களுக்கும் -- 450 பட்டியல் பதிவில்லா நிறுவனங்களுக்கும் சொந்தமானதாகும் எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

போலிக் குத்தகை முச்சலிக்கைகள்

358 பட்டியல் பதிவு நிறுவனங்களிலும், 9,682 பட்டியல் பதிவில்லா நிறுவனங்களிலும், 'போலிக் குத்தகை முச்சலிக்கை'கள் இருப்பதைப் பற்றி விசாரிக்குமாறு அரசாங்கம், இந்து மத -- அறக் கட்டளைகள் பாதுகாப்புத் துறையைக் கேட்டுக் கொண்டது.

இந்நிறுவனங்கள், அறக் கட்டளைத் துறை நிர்வாகத்தின்கீழ் வருபவை ஆகும்; 4 தனி துணைக் கலெக்டர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

சில மாவட்டங்களில் ஜூன் மாத நிலவரத்தைப் பற்றி அரசுக்கு அறிக்கை தரப்பட்டிருக்கிறது; விரைவில் இறுதி அறிக்கை அளிக்கப்படும்.

இந்து மத -- அறக் கட்டளைப் பாதுகாப்புத் துறையின்கீழ் வரும் நிறுவனங்களிடம் மொத்தம் சுமார் 4 இலட்சம் ஏக்கர் (நன்செய் -- புன்செய் இரண்டும் சேர்த்த) நிலம் இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தனித் துணைக் கலெக்டர்கள் நால்வரும், 1971 ஜூன் திங்கள் முடிய 35 பட்டியல் பதிவு நிறுவனங்களின் நிலங்களையும், 450 பட்டியல் பதிவில்லா நிறுவனங்களின் நிலங்களையும் பார்வையிட்டு விசாரித்துள்ளனர்; 12 784 ஏக்கர் நிலங்கள் இந்நிறுவனங்களின் உரிமையிலும் அனுபோகத்திலும் இல்லை என்பதும், அதிகாரபூர்வமற்றவர்களின் கையில் இருப்பதும் தணிக்கையிலிருந்து தெரியவந்தது.

குறைவான 'வாரம்' பெறப்படும் நிலைமை

3,000 ஏக்கர் பயிரிடும் 2,230 பேரிடமிருந்து மிகவும் குறைவான 'வாரம்' பெறப்படுகிறது; இந்நிலங்களிலிருந்து 'நியாய வாரம்' கிடைக்கும் வகையில் -- நியாயமான வாரம் நிர்ணயிக்கச் சென்னைப் பொது அறக்கட்டளைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குறைவானவாடகைக்கு வீட்டு மனைகள்

நகரங்களில் சுமார் 225 ஏக்கர் பரப்பளவு உள்ள வீட்டு மனைகள் அதிகாரமற்றவர்களின் அனுபோகத்தில் உள்ளன.

280 ஏக்கர் பரப்புள்ள மனைகள் மிகக் குறைவான வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

293 கட்டடங்கள் குறைந்த வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

"குறைந்தபட்சம் இன்னும் 7 000 நிறுவனங்களை இந்தத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்"

என்று தனி அதிகாரிகள், இந்து மத -- அறக்கட்டளைகள் துறையினருக்குப் பரிந்துரை செய்துள்ளனர்.

கட்டுப்பாட்டுக்குள் வராத 15,650 நிறுவனங்கள்

வடாற்காடு, திருச்சி, தஞ்சை, மதுரை, சென்னை மாவட்டங்களில் எல்லாக் கிராமங்களிலும் உள்ள வருவாய்க் கணக்குகளையும், செங்கற்பட்டு, தென்னாற்காடு, இராமநாதபுரம், நெல்லை, கோவை மாவட்டங்களில் 70 சதவிகிதத்திற்கு மேற்பட்ட கிராமங்களின் வருவாய்க் கணக்குகளையும் பரிசீலித்துள்ளனர்.

சுமார் 84,783 ஏக்கர் நிலமுள்ள 15 650 நிறுவனங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்றும், இவற்றில் பாதி நிறுவனங்களாவது ரூ. 200-க்கு மேல் வருமானமுள்ளவைகளாக இருக்கக் கூடுமென்றும், அவற்றை இத்துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாமென்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிலத் தணிக்கை -- விசாரணைக்காக அதிகப்படி ஊழியர்களை நியமித்துக் கொள்வதற்கான திட்டமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

கங்கை நதியில் படகு கவிழ்ந்தது

80 பேர் மூழ்கினர்

மிர்சாபூர், ஆக. 31—

உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள மிர்சாபூரில் -- கங்கை நதியில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், நாட்டுப் படகு ஒன்று கவிழ்ந்து 80 பேர் மூழ்கிவிட்டனர்.

12 பெண்கள் உட்பட 33 பேர் மீட்கப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அந்தப் படகில் 100 பேர் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

தில்லை வில்லாளன்

சுற்றுப்பயணம்

புதுடில்லி, ஆக. 31—

நாடாளுமன்ற மேலவை தி.மு.க. குழுத் தலைவர் தில்லை வில்லாளன் வழக்கறிஞர் சட்டப் பொறுக்குக் குழு உறுப்பினராக செப்டம்பர் திங்கள் 8-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை சுற்றுப்பயணம் செய்கிறார்.

செப். 8, 9, 10: அலகாபாத்— உத்தரப் பிரதேச பார் கவுன்சில், உயர் நீதிமன்றம், மாநில அரசு ஆகியவைகளின் சாட்சியங்கள்.

செப். 11, 12, 13: பாட்னா— பீகார் பார் கவுன்சில், உயர் நீதிமன்றப் பல்வேறு வழக்கறிஞர்கள், பகல்பூர் பல்கலைக் கழகம், பாட்னா உயர் நீதிமன்றம், பீகார் மாநில அரசு சாட்சியங்கள்.

செப். 13, 14, 15: கல்கத்தா— மேற்கு வங்க பார் கவுன்சில், அலிபூர், பெர்காம்பூர், மூர்ஷிதாபாத், அகர்தலா, உல்பேரியா, டார்ஜிலிங், ஊக்ளி, பாரக்பூர் வழக்கறிஞர் மன்றங்கள், மேற்கு வங்க மாநில அரசு, ஒரிசா பார் கவுன்சில், உத்கல் பல்கலைக் கழகம், ஒரிசா மாநில அரசு, உயர் நீதிமன்ற சாட்சியங்கள்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

17-9-72-ல் சென்னையில் சிறப்புமிக்க ஊர்வலம்

மாவட்டக் கழக அமைப்புகளுக்கு

மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

சென்னை, செப். 1—

சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் எம்.எல்.சி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியதாவது :—

"பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்தநாள் விழாவினையொட்டி, 17—9—72 ஞாயிறன்று மிகச் சிறப்பான ஊர்வலமும் -- பொதுக்கூட்ட நிகழ்ச்சியும், மாவட்டக் கழகச் சார்பில் அதற்கென அமைக்கப்பட்டுள்ள ஊர்வலக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

ஊர்வலம் இதுவரையில் அமையாத பலவிதச் சிறப்புக்களுடன் நடைபெறுவதற்காக மாவட்டத்தின் ஒவ்வொரு கழக அமைப்பும் உரிய பங்கு கொண்டு இன்று முதலே முனைந்து பணியாற்றுமாறு பகுதி -- வட்ட -- கழக அமைப்புகளையும், வட்டந்தோறும் உள்ள துணை -- சார்புமன்ற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்வதுடன், ஊர்வலத்தின் சிறப்புமிகுந்த பல்வேறு பணிகளிலும் ஊர்வலக் குழுவினரோடு அவ்வப்போது தொடர்பு கொண்டு கடமையாற்றுமாறும் கேட்டுக்கொள்கிறேன்."

திருச்சி மாவட்ட தி. மு. க. கூட்டம்

"திருச்சி மாவட்ட தி.மு. கழகக் கூட்டம் -- 3—9—72 மாலை 4-மணியளவில் -- திருச்சி முனிசிபல் சத்திரத்தில், ஜி. ராங்குசம் எம்.எல்.சி. தலைமையில் நடைபெறும்; அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா -- மாவட்டக் கழகக் கட்டடம் -- கழக ஆக்கப் பணிகளி ஆகியவை ஆய்வுக்கு வரும்; உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று திருச்சி மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் அறிவிக்கிறார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. கூட்டம்

"வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், 3—9—72 காலை 10 மணியளவில் ஆரணி பயணியர் விடுதியில், மாவட்ட அவைத் தலைவர் மா.பா. சாரதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; அதுபோது, மாநாட்டு வரவு-செலவுக் கணக்குகள்--கழக வளர்ச்சி--மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் இதர பிரச்சினைகள் ஆகியவைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்; உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ. அறிவிக்கிறார்.

பொன்னேரி வட்ட தி. மு. க. கூட்டம்

"3--9--72 காலை 10 மணியளவில், பொன்னேரி வட்ட தி. மு. க. கூட்டம், மாண்டியம்மன் நகர் பாடிநெல்லூர் பஞ்சாயத்து பள்ளியில் (ரெட் ஹில்ஸ் அருகில்) ஆ. கிருட்டிணன தலைமையில் -- பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்; ஆய்வுக்கு வருபவை :—பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் -- கழகப் பிரச்சாரம் -- வட்டக் கழகக் கட்டடம் கட்டுதல்; உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று வட்டச் செயலாளர் மு. கேசவன் அறிவிக்கிறார்.

நீத்தார் நினைவு நாள்

25—8—72 ல் இயற்கையெய்திய அஞ்சலையம்மாள் (மாயூரம் என். கிட்டப்பா எம்.எல்.ஏ. அவர்களின் அன்னையார்) நினைவு நாள், 3—9—72 காலை 10 30 மணியளவில், மாயூரம்—கூறைநாடு இராமசாமித் தெருவிலுள்ள இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, அம்மையாரின் உருவப் படம் திறந்து வைக்கப்படும்.

அரசு நிறுவனங்களின் தொலைபேசிக் கட்டணப் பாக்கி

புதுடில்லி, ஆக, 30—

"இந்தியா முழுவதிலும் தொலைபேசிக் கட்டணப்பாக்கி சென்ற பிப்ரவரி மாதம் முடிய ரூ. 6,04,000 ஆகும்; இவைகளில் பெரும்பாலும் அரசு அலுவலகங்களும் -- அரசு நிறுவனங்களும செலுத்த வேண்டிய தொகையாகும்"

என்று மத்திய போக்குவரத்து அமைச்சர் பகுகுணா கூறினர்.

"அரசு அலுவலகங்களாக இருந்தாலும், கட்டணம் பாக்கி இருந்தால டெலிபோன் தொடர்பைத் துண்டித்து விடும்படி கூறியிருக்கிறேன்" என்றும் தெரிவித்தார்.

பழைய டிராக்டர்கள் விற்பனை

தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை மாவட்டப் பொறியியல் பிரிவு, சிவகங்கை

டெண்டர் அறிக்கை

சிவகங்கையிலுள்ள வேளாண்மைத் துணைப் பொறியாளர் (மெக்கானிகல்) அவர்களின் அலுவலகத்தில் உள்ள பழுதடைந்த மற்றும் செயலாற்றல் இல்லாத டிராக்டர்கள் (Crawlers Wheel Type) உள்ள நிலையிலேயே வாங்குவதற்கான டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன.

டெண்டர் படிவங்கள், டெண்டர் நிபந்தனைகள் ஆகியவை, சிவகங்கையிலுள்ள வேளாண்மைத் துணைப் பொறியாளர் (மெக்கானிகல்) அவர்களின் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும், முற்பகல் 11-00 மணிமுதல் பிற்பகல் 3 00 மணி வரையில் ரூ. 3.15 ரொக்கமாகச் செலுத்தியோ அல்லது அஞ்சல் பணவிடைத் தாள் மூலம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். டெண்டர்கள் 25—9—1972 நாளன்று பிரிக்கப்படும்.

பழுதடைந்துள்ள டிராக்டர்களை எந்த ஒரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

(ஒ-ம்) ஆர். கிருஷ்ணராவ்,
வேளாண்மைத் துணைப் பொறியாளர் (எம்). சிவகங்கை.

சர்க்கரை விலை-நாடு முழுவதும் ஒரே விலையில் விற்கத் திட்டம்

புதுடில்லி, ஆக. 31—

சர்க்கரை விலை நிர்ணயம் பற்றி நாடாளுமன்ற மேலவையில் நேற்று விவாதம் நடந்தது; விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஷேர் சிங் கூறியதாவது :—

'இந்தியாவில் ஒவ்வோர் இடத்திலும் மாறுபட்ட விலையில் சர்க்கரை விற்பனை செய்யப்படுகிறது; கிலோ ரூ. 1 23-லிருந்து ரூ. 1-80-வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதைக் கட்டுப்படுத்தி, எல்லா இடங்களிலும் ஒரே விலைக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இந்தப் புதிய திட்டத்தின் மூலம் ஒரு கிலோ சர்க்கரை ரூ. 1 50-க்கு விற்பனை செய்யப்படும்; இந்தத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்; சர்க்கரையில் 70 சதவிகிதம் இதேபோல கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படும்.

ஆண்டுக்கு 38 இலட்சம் டன் சர்க்கரை தேவைப்படுகிறது; ஆனால் இந்த ஆண்டு 31 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்திச் செய்யப்பட்டுள்ளது; இதிலும் 1 இலட்சம் டன் சர்க்கரை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவிட்டது.

அடுத்த ஆண்டும் சர்க்கரை உற்பத்தி அதிகரிப்பதற்கான வாய்ப்பு இல்லை; ஆகவே, சர்க்கரை விநியோகத்தில் மாநில அரசுகள் நிலையான முறையை ஏற்படுத்த வேண்டும்."

நேர்முக வரி வசூலுக்கு ஆனசெலவுகள் விவரம்

புதுடில்லி, ஆக. 30—

சென்ற மூன்று ஆண்டுகளில் நேர்முக வரி வசூலுக்கு ஆன செலவுகள் பற்றிய விவரங்கள் நாடாளுமன்ற மேலவையில் தரப்பட்டன.

1969--70 : ரூ. 16.16 கோடி.
1970--71 : ரூ. 19.44 கோடி.
1971--72 : ரூ. 21.04 கோடி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]